(சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

எஸ்டிசி எண் 446 /21 அ.சா.1 ராமசாமி த/பெ.வீரப்பன் நாள் : **30.09.2022**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அரசுப்பள்ளி ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். எதிரி அரசுப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து தற்போது ஓய்வில் உள்ளார். எதிரி எனக்கு எந்த வகையில் பழக்கம் என்றால் எதிரி ஆசிரியர் என்ற வகையிலும் நான் படித்த கல்லூரியில் எனக்கு மூத்த மாணவர் என்ற வகையிலும் பழக்கம் ஆகும். எதிரிக்கும் எனக்கும் இடையே சுமார் 30 ஆண்டுகளாக கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை. நண்பர் என்கிற பழக்கம் மட்டும்தான். **17.02.2019** ம்தேதியில் பணம் வாங்கினார். அதற்கு முன்பு கொடுக்கல் வாங்கல் இல்லை. **17.02.2019 ம்** தேதி நான் பணம் கொடுக்கும்போது வேறு யாராவது இருந்தார்களா என்றால் ஆசிரியர் பிரபாகரன் என்னுடன் இருந்தார். எதிரிக்கு பணம் கொடுக்கும்போது வேறு ஆவணங்கள் எதுவும் எதிரியிடம் வாங்கிகொண்டு பணம் கொடுத்தேனா என்றால் வழக்கு தொடர்புடைய காசோலை மட்டும் எதிரி கொடுத்தார். நான் பணம் கொடுக்கும்முன்பு தொகைக்கான காசோலையினை எதிரியிடம் பெற்றுக்கொண்டுதான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். தற்போது சாட்சி தானாக முன்வந்து நான் பணம் கொடுக்கும்போது எதிரி காசோலை கொடுக்கவில்லை. நான் பணத்தை திருப்பி கேட்டபோதுதான் காசோலை வழங்கினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். நான் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது காசோலை வாங்கிகொண்டுதான் பணம் கொடுத்தேனா அல்லது காசோலை வாங்காமல் பணம் கொடுத்தேனா என்ற விபரத்தினை எதிரிக்கு பணம் கொடுக்கும்போது உடன் இருந்ததாக கூறப்படும் ஆசிரியர் பிரபாகரனை விசாரணை செய்தால்தான் தெரியும் என்றால் சரிதான்.

2. நான் எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் ரூ.3 லட்சம் தொகையினை எனது வருமானவரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் நான் எனது சேமிப்பு தொகையிலிருந்து கொடுத்தேன். எதிரி **17.03.2021** அன்று எதிரி அவரது வீட்டில் வைத்து காசோலையினை என் முன்பு பூர்த்தி செய்து கொடுத்தார். அப்போதும் ஆசிரியர் பிரபாகரன் உடனிருந்தார். **ம.சா.ஆ.1 காசோலையில்** பெயர் ,தொகை,தேதி ஆகியன ஒரு பேனாவாலும் எதிரியின் கையொப்பம் வேறு பேனாவாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலையில் காணப்படும் கையொப்பம் எதிரியால் இடப்பட்ட கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல எதிரிதான் கையொப்பம் செய்து கொடுத்தார். ம.சா.ஆ.1 காசோலையினை எதிரி என்முன்பு உண்மையிலேயே நிரப்பி கொடுத்திருந்தால் வெவ்வேறு பேனா மையினால் பூர்த்தி செய்து கொடுத்திருக்கமாட்டார் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்தும் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையில் காணப்படும் கையொப்பமும் வேறுபாடாக உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரி என்னிடம் எவ்வித கடன்தொகை வாங்கவில்லை என்றாலும் காசோலை எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )